## 8.57 பணியமைப்பு – நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் – குடிநீர் திட்ட பராமரிப்புப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க அளவுகோல் (Norms) நிர்ணயம் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை

அரசாணை (நிலை) எண்.198 நாள் : 26.10.1998

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண். 1255, ஊ.வ.உ. துறை, நாள்.30.8.83
2. அரசாணை (நிலை) எண். 261, ந.நி.மகு.வ. துறை, நாள்.14.10.96
3. நகராட்சி நிர்வாக ஆணையாளரது நேர்முக கடிதம் எண். 54977/97/கு3 நாள் 1.10.97 மற்றும் கடிதம் நாள். 17.2.98
4. பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் எண். 23630/97/அ3 நாள். 11.5.98

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணியின் கீழ் பணியிடங்கள் தோற்றுவிக்க அளவுகோல் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேற்குறிப்பிட்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள சில பணியிடங்களுக்கு அளவுகோல் நிர்ணயித்தும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின் அடிப்படையிலும் அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். இதுபோன்று, பேரூராட்சிகளின் இயக்குநரும் பேரூராட்சிகளில் குடிநீர் திட்டம் மற்றும் குடிநீர் ஆதாரங்கள் பராமரிப்புப் பணிக்காக பணியிடங்கள் தோற்றுவிக்க அளவுகோல் நிர்ணயம் செய்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலனை செய்து நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் குடிநீர் பராமரிப்புக்கான பணியிடங்களுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அளவுகோல் நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

அ) நகராட்சிகளுக்கு மற்றும் பேரூராட்சிகளுக்கு

| பணியிடம் | அளவுகோல் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 1. குழாய் ஆய்வாளர் 1 | 2000 குடிநீர் குழாய்களுக்கு (பொதுக்குழாய் மற்றும் வீட்டுக்குழாய் இணைப்புகளும் சேர்த்து) | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |
| 2. உதவியாளர் (Helper) 1 | ஒவ்வொரு தலைமையிடத்திற்கும் | எட்டாம் வகுப்பு |
| 3. வடிகட்டி படுகை இயக்குபவர் 1 | மூன்று வடிகட்டி படுகைக்கு அல்லது அதன் பகுதிக்கு (நாளொன்றுக்கு 8 மணி நேர பணிக்கு) | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |
| 4. தலைமை நீரேற்று நிலைப் பொருத்துநர் 1 | 15 கி.மீ. நீளம் வரையுள்ள பிரதான பகிர்மான குழாய்க்கு | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |
| தலைமை நீரேற்று நிலையப் பொருத்துநர் 1 | இரண்டு வடிகட்டி படுகைக்கு | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |
| 5. குடிநீர் குழாய்லைன் பொருத்துநர் 1 | 30.கி.மீ. நீளம் வரையுள்ள பிரதான பகிர்மான குழாய்க்கு ஒவ்வொரு | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |
| குடிநீர் குழாய்லைன் பொருத்துநர் 1 | கூடுதல் 30 கி.மீ. நீளத்திற்கு | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |

| பணியிடம் | அளவுகோல் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 6. மின்வினைஞர் நிலை I 1 (C சான்றிதழ்) | 40 முதல் 150 குதிரைசக்தி திறனுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட பூஸ்டர் நிலையத்திற்கு (நாளொன்றுக்கு எட்டுமணி நேரப் பணிக்கு) | பத்தாம் வகுப்பு மற்றும் பொறியியல் பட்டயப்படிப்பு (மின்சாரம்/ இயந்திரவியல்) (அல்லது) ஐ.டி.ஐ. எலக்டிரிஷியன் படிப்பு) (அல்லது) தொழிற்கல்வி பயிற்சி நிறுவன தேசிய குழுமம் அளித்த சான்றிதழ் |
| 7. மின்வினைஞர் நிலை II 1 (B.சான்றிதழ்) – | 40 குதிரை சக்தி திறனுக்குட்பட்ட பூஸ்டர் நிலையத்திற்கு (நாளொன்றுக்கு எட்டுமணி நேரப் பணிக்கு) | பத்தாம் வகுப்பு மற்றும் பொறியியல் பட்டயப்படிப்பு (மின்சாரம்) (அல்லது) ஐ.டி.ஐ. எலக்டிரிஷியன் படிப்பு) (அல்லது) தொழிற்கல்வி பயிற்சி நிறுவன தேசிய குழுமம் அளித்த சான்றிதழ் |
| ஆ) நகராட்சிகளுக்கு மட்டும் | | |
| | | |
| 1. தலைமையிட மேலாளர் 1 | ஒவ்வொரு தலைமையிடத்திற்கும் | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |
| 2. குழாய் திறப்பவர் 1 | ஒவ்வொரு 30 வால்வுக்கும் | எட்டாம் வகுப்பு |
| 3. குடிநீர்ப்பணி கண்காணிப்பாளர் 1 | 100 எம்.எல்.டி கொள்திறனுள்ள குடிநீர் திட்டத்திற்கு | பி.இ. (அல்லது) டிப்ளமோ (அல்லது) எல்.இ.இ. (அல்லது) எல்.எம்.இ. |
| 4. மின்னியல் கண்காணிப்பாளர் 1 | 150 குதிரைச் சக்தி திறனுக்கு மேம்பட்ட பூஸ்டர் நிலையத்திற்கு | பொறியியல் பட்டயப்படிப்பு (மின்சாரம்) |
| இ. பேரூராட்சிகளுக்கு மட்டும் | | |
| | | |
| 1. காவல்காரர் 1 | – | எட்டாம் வகுப்பு |
| 2. மீட்டர் ரீடர் 1 | – | பத்தாம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ |

மேலும் பேரூராட்சிகளில் பராமரிக்கப்படும் குடிநீர் ஆதாரங்களின் பராமரிப்புக்காக கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் நியமனம் செய்யலாம் (இவை பேரூராட்சிகளுக்கு மட்டும்)

| பணியிடம் | அளவுகோல் | கல்வித்தகுதி | தொகுப்பூதியம் |
|---|---|---|---|
| 1. மேல்நிலைத்தொட்டி/ தரைமட்டத் தொட்டி இயக்குபவர்/ காவல்காரர்...1 | ஒவ்வொரு மேல்நிலைத் தொட்டி மற்றும் தரைமட்டத் தொட்டிக்கும் | எட்டாம் வகுப்பு | மாதம் ரூ. 600/ தொகுப் பூதியம் வழங்கலாம். ஒரே நபர் ஒன்றுக்கு மேற்படி மேல்நிலைத்தொட்டி பராமரித்தால் கூடுதலான ஒவ்வொரு தொட்டிக்கும் ரூ. 100/– வீதம் வழங்கலாம். வருடாந்திர உயர்வு ரூ. 50/– |

**8. பணியமைப்பு**

| பணியிடம் | அளவுகோல் | கல்வித்தகுதி | தொகுப்பூதியம் |
|---|---|---|---|
| 2. மோட்டார் இயக்குபவர் ...1 | மேல்நிலைத் தொட்டி அல்லது தரைமட்டத் தொட்டி ஓரிடத்திலும் மின்மோட்டார் வேறோர் இடத்திலும் இருப்பின் | எட்டாம் வகுப்பு | மாதம் ரூ. 600/ என்ற தொகுப்பூதியத்தில் வருடாந்திர உயர்வு ரூ. 50/– |
| 3. குடிநீர் வழங்கல் பராமரிப்பவர்......1 | மேல்நிலைத் தொட்டி அல்லது தரைமட்டத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிற பொதுக் குழாய்கள் மற்றும் குடிநீர் இணைப்புகள் 500க்கு மேல் உள்ளபோது. | எட்டாம் வகுப்பு | மாதம் ரூ. 1000/– வீதம் தொகுப்பூதியத்தில் வருடாந்திர உயர்வு ரூ. 75/– |
| 4. கைபம்புகள் பராமரிப்பவர் .....1 | 50 முதல் 100 குழாய்களுக்கு | எட்டாம் வகுப்பு | மாதம் ரூ. 1500/– தொகுப்பூதியத்தில் வருடாந்திர உயர்வு ரூ. 100/– |

நிபந்தனைகள்

(1) அளவுகோலின்படி நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் பணியாளர்கள் நியமனம் செய்ய வேண்டுமெனில் பணியாளர்களுக்கான செலவினத்தை நகராட்சி/பேரூராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதலளித்து சம்பந்தப்பட்ட நகராட்சி மன்றம் / பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

(2) அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையரால் / பேரூராட்சிகளின் இயக்குநரால், நகராட்சி/பேரூராட்சியின் நிதி நிலைமையை பரிசீலித்து தேவையான பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

(3) இப்பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று விதிமுறைகளின்படி பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(4) மேலே (அ), (ஆ) மற்றும் (இ)–ல் குறிப்பிட்டுள்ள பணியிடங்களில் புதியதாக நியமனம் செய்யப்படும் பணியார்கள் கீழ்க்கண்டவாறு தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

1. பொறியியல் பட்டயப்படிப்பின் கல்வித் தகுதியாக வரையறுக்கப்பட்ட இனங்களுக்கு ............ மாதம் ரூ. 2,500/–
2. ஐ.டி.ஐ. போன்ற தொழிற்கல்வியை கல்வித்தகுதியாக வரையறுக்கப்பட்ட இனங்களுக்கு ............ மாதம் ரூ. 2,000/–
3. பள்ளி இறுதிகல்வி அல்லது எட்டாம் வகுப்பினை கல்வித்தகுதியாக வரையறுக்கப்பட்ட இனங்களுக்கு ............ மாதம் ரூ. 1,700/–

இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 5 (ஐந்து) சதவீதம் அதிகரிக்கப்படும்

(5) புதிதாக நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் முதலில் ஓராண்டு காலத்திற்கு மட்டும் நியமனம் செய்யப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொரு ஆண்டு காலத்திற்கும் நியமத்தை புதுப்பித்து அவர்களின் செயல்திறனைப் பொறுத்து தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு நியமனம் செய்யப்படவேண்டும். மூன்று ஆண்டுகளுக்குப்

பின்னர் பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்து அவர்களை ஊதிய ஏற்றமுறையில் நியமனம் செய்யப்படவேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து ஆணையிடும்.

2. நகராட்சிகளில் 31.12.96 அன்றைய நிலவரப்படி (As on 31.12.96) தினக்கூலியாகப் பணிபுரியும் நபர்களை புதிதாகத் தோற்றுவிக்கும் பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பின்வரும் அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

(1) வேலைவாய்ப்பு அலுவலகம் முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு நீண்ட காலமாக பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்களை முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

(2) வேலை வாய்ப்பகத்தில் பதிவுசெய்து, ஆனால் வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்களை அவர்கள் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

(3) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாமல் தினக்கூலியாகப் பணியாற்றுபவர்களை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய அறிவுறுத்தி, பதிவு செய்தபின்னர் அப்பதிவின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து நியமனம் செய்யலாம்.

(4) பணியிடங்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள கல்வித்தகுதி, தொழில்நுட்பத் தகுதி ஆகியவற்றை பெற்றுள்ள நபர்களை மட்டுமே மேற்சொன்ன வழிமுறைகளில் பணி நியமனம் செய்யலாம்.

(5) தேவையான கல்வித்தகுதி மற்றும் தொழில்நுட்பத் தகுதி பெற்றிராவிடில், அவர்கள் சார்பாக விதிகளை தளர்வுசெய்ய நகராட்சி நிர்வாக ஆணையரின்/பேரூராட்சிகளின் இயக்குநரின் ஆணை பெறவேண்டும். மேலும் அத்தகைய நபர்களை அவர்களுடைய கல்வித்தகுதியின் அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியத்தில் நியமனம் செய்யலாம்.

3. இனி வருங்காலத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர் திட்டப் பணியை பராமரிப்பிற்காக நகராட்சி/ பேரூராட்சி வசம் ஒப்படைக்கும்பொழுது, அத்திட்டப் பணியை நகராட்சி / பேரூராட்சி எடுத்துக்கொள்வதற்கு முன்னர் பராமரிப்புப் பணிக்கு மேற்கண்ட அளவுகோலின்படி தேவைப்படும் பணியாளர்கள் நகராட்சி நிர்வாக ஆணையரால்/ பேரூராட்சிகளின் இயக்குநரால் தோற்றுவிக்கப்பட அனுமதி அளிக்கலாம். மேலும் எந்த ஒரு பேரூராட்சியிலாவது நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலுக்கும் கூடுதலாக தினக்கூலிப் பணியாளர்கள் இருந்தால் அவர்களை அதே பேரூராட்சியில் தெருவிளக்குப் பராமரிப்பு பணிகளுக்கோ அல்லது கூடுதலாக பணியாளர்கள் தேவைப்படும் இதர பேரூராட்சிகளிலோ ஈர்த்துக்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

4. இந்த அரசாணை வேலைவாய்ப்புத் துறையின் 13.8.98 அன்று பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**

அரசுச் செயலாளர்